சுருக்கம்

நிலம் – வீட்டுமனை பட்டா – அரசு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் 30.9.2010 உடன் முடிவடைந்தது – மேலும் ஓராண்டு காலத்திற்கு 30.9.2011 வரை நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் நிர்வாக(2) துறை

அரசாணை (நிலை) எண். 482 நாள்: 28.9.2010

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.854 வருவாய்த்துறை, நாள் 30.12.06.
2. அரசாணை (நிலை) எண். 498 வருவாய்த்துறை, நாள் 5.9.2007.
3. அரசாணை (2டி) எண். 711 வருவாய்த்துறை, நாள் 10.11.2007.
4. அரசாணை (நிலை) எண். 34 வருவாய்த்துறை, நாள் 23.1.2008.
5. அரசாணை (நிலை) எண் 241 வருவாய்த்துறை, நாள் 9.5.2008.
6. அரசாணை (நிலை) எண் 579 வருவாய்த்துறை, நாள் 3.10.2008.
7. அரசாணை ((நிலை) எண் 366 வருவாய்த்துறை, நாள் 8.10.2009.
8. அரசாணை (நிலை) எண்.43, வருவாய்த்துறை நாள் 29.1.2010.

****

ஆணை:

1. அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு, அவர்களது ஆக்கிர மிப்புகளை வரன்முறை செய்து, வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் பார்வை 1-இல் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டது. இச்சிறப்பு திட்டத்தின் கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அக்குடியிருப்புகளை புல்த் தணிக்கை செய்து, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று, அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லை எனில் வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறைப்படுத்தவும் ஆணையிடப்பட்டது. இதற்கென செயல்பாட்டிலிருந்த பல டையாணைகள் தளர்வு செய்யப்பட்டன.

2. இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, பார்வை 2-இல் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் பார்வை 3-இல் படிக்கப்பட்ட அரசாணையில் இலவச ஒப்பந்தை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு நீக்கப்பட்டும், ஊரகப் பகுதிகளில் 3 சென்ட், நகராட்சிப் பகுதிகளில் 1½ சென்ட் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 1 சென்ட் என்று திருத்தி வரம்பை இத்திட்டத்திற்கு மீண்டும் விரிவுபடுத்தி, ஊரகப் பகுதிகளில் 4 சென்ட், நகராட்சி பகுதிகளில் 2½ சென்ட் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 2 சென்ட் என்கிற அளவில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

த.பி.பா.

-106-

3. இதிட்டம் அரசு நிலங்களில் ஐந்தாண்டுக்குமுக்கு மேல் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என பார்வை 4-இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் குடியிருப்பு கால வரம்பை ஐந்தாண்டு காலமாக உள்ளதை மூன்று ஆண்டுகளாக குறைத்து பார்வை 8-இல் காணும் அரசாணையில் அரசு ஆணையிட்டது. இதற்கிடையில் மேலும், அதிக அளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை விரைவுபடுத்தவும் இத்திட்டம் பலமுறை நீட்டிக்கப்பட்டு பார்வை 7-இல் படிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 30.9.2010 வரை நீட்டிக்கப்பட்டது.

4. பார்வை 8-இல் படிக்கப்பட்ட அரசாணையில் குடியிருப்பு கால வரம்பை ஐந்தாண்டு காலத்திலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைத்து வெளியிடப்பட்ட அரசாணையை எதிர்த்து சிவகாசிப் பகுதி வரி செலுத்துவோர் சங்கத்தால் தொடரப்பட்ட வழக்கில், இந்த வழக்கு விசாரணை முடியும் வரை இந்த அரசாணை செயல்படுத்தக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், அரசின் இலவச வீட்டுமனை வழங்கும் ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்டுள்ள ஏழை எளிய மக்கள் பயன் அடையும் பொருட்டு அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்த ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை 1.10.2010 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு, அதாவது 30.9.2011 வரை நீட்டிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இந்த அரசாணையின்படி உரிய நடவடிக்கை எடுக்கும்படி முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி.தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நகல்
அனைத்து துறை செயலாளர்கள், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
வருவாய்த்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இசக்கி//ஜூனியர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/9/10
பிரிவு அலுவலர்

29/9/10